## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண்.252 /1995

DW1 – திரு. புகழேந்தி த/பெ.கருப்பையா நாள். 17.03.2026

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1.வாதியின் தாயார் காளியம்மாளின் தகப்பனார் பெயர் அமராவதி அம்பலம் என்றால் சரிதான். மேற்படி அமரவாதிஅம்பலம் பர்மாவில் தொழில் செய்து வந்தார் என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. மேற்படி அமராவதி அம்பலத்திற்கு குறுந்தனக்கோட்டை, கற்களத்துார், உரத்துார், பருத்தியூர் ஆகிய ஊர்களில் சொத்துகள் உண்டு என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது.மேற்படி அமராவதி அம்லபம் எனது ஐயா என்றால் சரிதான். அமராவதி அம்பலம் நல்ல வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது.அவரை நான் பார்த்ததில்லை.அவர் நல்ல வசதி வாய்ப்புகளுடன் தான் வாழ்ந்து வந்தார் என்றும் நான் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு 1984 ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு நினைவில் இல்லை.

2. தாவா சொத்துகளை பொறுத்து வாதி யாருக்கும் கிரையம் அல்லது இனாம், விடுதலைபத்திரம் எழுதி கொடுக்கவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வ.சா.ஆ.1, வ.சா.ஆ.2 ஆவணங்கள் பொது குடும்ப வருமானத்திலிருந்து கிரையம் பெறப்படவில்லை என்றால் அந்த ஆவணத்தின் விவரம் எனக்கு தெரியாது. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் படிக்க தெரியும். வ.சா.ஆ.1, வ.சா.ஆ.2 ஆவணங்களில் பக்கம் 2ல் மைனரின் ஐவேஸ்லிருந்து ரூ 4500

பெற்றுகொண்டேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் அவ்வாறு வாங்கியதாக தெரிவிக்கவில்லை. நான் மேற்படி சங்கதியை ஒப்புகொண்டால் வழக்கானது எனக்கு பாதகமாக அமையும் என்பதால் எனது தகப்பனார் என்னிடம் சொல்லவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வ.சா.ஆ.1, வ.சா.ஆ.2 ஆவணங்களில் கண்டுள்ள சொத்துகளின் தெற்கு பக்கம்உள்ள 2 ஏக்கர் 28 சென்ட் சொத்தினை வ.சா.ஆ.10 ஆவணம் மூலம் எனது தகப்பனார் கிரையம் பெற்றார் என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. சர்வே எண் 44/2 ல் கண்டுள்ள சொத்தின் வட பகுதியானது சர்வே எண் 44/2 எ எனவும் நடுப்பகுதி ஆனது சர்வே எண் 44/2 பி எனவும் தென்பகுதி உள்ள சொத்து சர்வே எண் 44/2 சி என உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

3. சர்வே எண் 44/2 எ ல் கண்டுள்ள சொத்தை வ.சா.ஆ 12 ஆவணம் மூலம் சதகத்துல்லா ஆலிம்சாகிப் வரையரா, சூசையம்மாள், சந்தியாகு ஆகியோருக்கு அடமானம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வாதி எனது தகப்பனரான கருப்பையா தேவருக்கு தாவாசொத்தை பொறுத்து பவர்ஆவணமோ, இனாமோ,கிரையமோ எழுதி கொடுக்கவில்லை என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல்செய்வதற்கு 2 வருடங்களுக்கு முன்புதான் தாவா சொத்தில் இவ்வழக்கில் கண்டுள்ள சில பிரதிவாதிகள் வீடு கட்டினார்கள் என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. தாவா பகுதி சொத்தை பொறுத்து வழக்கில் கண்டுள்ள 6 முதல் 35 பிரதிவாதிகளுக்கு வாதி எவ்வித கிரைய ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாவா பகுதி சொத்தில் 6 முதல் 35 பிரதிவாதிகள் வீடு கட்டுவதற்கு அவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாவா பகுதிசொத்தில் வீடு கட்டிய நபர்களை காலிசெய்து அப்புறப்படுத்தி கொடுக்க வாதி செயல்பட்டார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாவாபகுதி சொத்தை பொருத்து எனது தகப்பனார் பெயரில் தவறுதலாக பட்டா ஏற்பட்டதால் அதை ரத்து செய்யகோரி வாதி RDO நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து அதில் ஏற்பட்ட வ.சா.ஆ.11 உத்தரவில் நான் 1 ம் எதிர்மனுதாரராக இடம்பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

4. RDO வழக்கு நிலுவையில் இருந்தபோது மேலும் தாவா சொத்தில் கண்டுள்ள

இடத்தை எனது தகப்பனார் விற்பனை செய்ததாக வாதி ராமநாதபுரம் உரிமையில் நீதிமன்றத்தில் எனக்கு எதிராகவும், எனது தகப்பனார் மற்றும் 6 முதல் 35 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கல் தாக்கல் செய்தார் என்றால் வழகடு தாக்கல் செய்த விவரத்தை எனது தகப்பனார் தெரிவித்தார். மேற்படி வழகடு நிலுவையில் இருந்ததை காரணம் காட்டி RDO நீதிமன்றத்தில் உரிய நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடி கொள்ளும் படி வா.சா.ஆ.11 உத்தரவு ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை வாதிபெயரில் கிரையம் வாங்கியதுபோல் 2,3 ம் பிரதிவாதிகளின் பெயரிலும் கிரையம் வாங்கப்பட்டது என்றால் அந்த விவரமும் எனக்கு தெரியாது. சேந்தணி கிராமத்தில் 2 ம் பிரதிவாதியின் ஐவேஸ்ஸை கொண்டு அவரது பெயரில் சொத்துகள் கிரையம் வாங்கப்பட்டது என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. மேற்படி சொத்திற்கு 2 ம் பிரதிவாதி பெயரில் தற்போது பட்டா உள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 23.03.1977 தேதி மேற்படி 2 ம் பிரதிவாதி பெயரில் அவரது ஐவேஸ்ஸை கொண்டு சொத்துகள் கிரையம் வாங்கப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்றும் அதை ஒப்புகொண்டால் வழக்கு பாதகமாக முடியும் என்பதால் நான் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. தாவா சொத்தின் தென்பகுதியில் உள்ள சொத்தை தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் நான் அடமானம் வைத்தேன் என்றால் அந்த சொத்தை எனது தகப்பனார் எனக்கு கொடுத்தார் அதனால் என் பெயரில் அடமானம் வைத்தேன்.மேற்படி சொத்தை பொருதது தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின் மூலம் நான் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் அடமானம் வைத்து Memorandum of Deposit of Title Deeds எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணமானது வ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.,ஆ.17 ஆவணத்தின் ஆகத்தம்மாள் சொத்திற்கு தென்புறம் உள்ள சொத்தை தான் அடமானம் வைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி வ.சா.ஆ.17 ல் கண்டுள்ள சொத்தை விற்றுவிட்டு வாதியின் சொத்தை ஏலம் விட முயற்சித்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஏலம் விட நடடிவக்கை எடுத்ததால் வாதி ராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்து அந்த ஏல நடவடிக்கையை ரத்து செய்தார்கள் என்றால் அந்த

விவரம் எனக்கு தெரியாது. அதற்கு பின்னிட்டுதான்நான் மேற்படி தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் பெற் ற கடனை கட்டினேன் என்றால் நான் கடனை திரும்ப செலுத்தி 15 வருடஙகள் ஆகிவிட்டது. அதன்பின் வ.சா.,ஆ.17 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை அடமானம் வைத்து ஸ்ரீராம் பைனான்சில் கடன் பெற்றேன் என்றால் எனது சொத்தை வைத்து நான் கடன்பெற்றேன். என்னிடம் தற்போது காட்டப்படும் ஆவணம் தான் நான் மேற்படி ஸ்ரீராம் பைனான்சில் அடமானம் வைத்து கடன் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் வ.சா,ஆ.18 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. வ.சா.ஆ.18 ஆவணத்திலும் சொத்தின் வடபகுதியானது ஆகாத்தம்மாளின் சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வ,சா.ஆ.17 மற்றும் வ.சா,.ஆ.18 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் தவறானது என்றால் சரியல்ல. எனதுதகப்பனார் எனக்கு எழுதி கொடுத்த சொத்துகளின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.42/3, 44./2 பி1 எ,2 எ, மேலும் இரண்டுசொத்துகளின் சர்வேஎண்கள் எனக்கு நினைவில் இல்லை.

6.எனது தகப்பனார் மேற்படி சொத்துகளை 1989 ஆண்டு ஜீலை 22ம் தேதி பதிவுசெய்யப்பட்ட உயில் ஆவணம் மூலம் எழுதி கொடுத்தார். மேற்படி உயில் ஆவணத்தை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதன் அசல் ஆவணத்தை வங்கியில் அடமானம் வைத்துள்ளேன். மேற்படி வங்கியில் அடமானம் வைத்த விவரத்தை எனது நிரூபண வாக்குமூலம், எதிர் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட வேண்டிய தேவையில்லை அதனால் குறிப்பிடவில்லை. எனது தகப்பனார் இவ்வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரை பாரா 31ல் சர்வே எண் 44/2 சில் கண்டுள்ள சொத்தை தான் எனக்கு உயில் எழுதி கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறாகும். நான் வழக்கிற்காக சர்வேஎண் 44/2 பி1 எ,2 எ சொத்தை எனதுதகப்பனார் உயில்எழுதி கொடுத்துள்ளார் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சர்வேஎண் 44/2 பி1 எ,2 எ செத்தை பொறுத்து எனது தகப்பனார் எனக்கு உயில் எழுதிகொடுப்பதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சர்வேஎண் 44/2 பி1 எ,2 எ கண்டுள்ள சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் பகுதி சொத்து

என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாவா பகுதி சொத்தை பொருத்து எனது தகப்பனார் 6 முதல் 35 பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதி கொடுப்பதற்கு அவருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கு உரிமை இல்லை என்பதால் அவர் எழுதி கொடுத்த ஆவணங்கள் சட்டபடி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாசொத்தை வாதிக்காக எனது தகப்பனார் மேல்பார்த்துவந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் சொத்தை தான் அவர் கவனித்து வந்தார். தாவா சொத்தை எனது தகப்பாரின் சொத்து என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.எனது தகப்பனாரின் சொத்துதான். தாவா சொத்தில் விலையும் மகசூலை எனது தகப்பனார் வாதியிடம் கொடுதது வந்தார் என்றால் அந்த விவரம் எனக்குதெரியாது. தாவா சொத்தை வாதி வழக்கு தாக்கல்செய்த 2 ஆண்டுகள் சென்று தான் ஆணையர் வந்து பார்வையிட்டார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. (சாட்சி நினைவில் இல்லை என்று சொன்னதாக தெரிவித்தார்). தாவா சொத்தை 2 ஆணடு கழித்து ஆணயைர் பார்வையிட்டபோது அதில் 30.35 வீடுகள் கட்டப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் 100 வீடுகளுக்கு மேல் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது 100 வீடுகளுக்கு மேல் உள்ளது. நான்வழக்கிற்காக 100 வீடுகள் மேல் உள்ளது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் எனது தாயார் 2 ம் பிரதி வாதி என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி எனது அக்கா ஆவார். தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. நிரூபணவாக்குமூலம் பாரா 5 ல் தாவாசொத்தை எனது தகப்பனார் 1972 ஆண்டு கிரையம் செய்யப்பட்டது என குறிப்பிட்டுளள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு நினைவில் இல்லை. நிரூபணவாக்குமூலம் பாரா 5 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்தால் உண்மை தன்மை தெரியவரும் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நிருபண வாக்குமூலம் பாரா 7 ல்கண்டுள்ள சர்வே எண் 44/2 ல் தென்புறம் உள்ள 2 ஏக்கர் 68 சென்ட் சொத்தின் ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்தால் வழக்கின் உண்மைதன்மை தெரியவரும் என்றால் சரிதான்.( சாட்சி தரப்பு இது வாதியால் ஒப்புகொள்ளப்பட்ட சங்கதி என ஆட்சயபணை தெரிவித்தனர்) மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில்

தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான்.வங்கியில் அடமானம் வைத்துள்ளேன். மேற்படி வங்கியில் அடமானம் வைத்துள்ள விவரத்தை நிரூபண வாக்குமூலத்திலும், எதிர் வழக்குரையிலும் தெரிவிக்கவி்ல்லை என்றால் எனக்கு நினைவில் இல்லை. எனக்கு நினைவில் இ்ல்லை என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பகுதி சொத்தில் 6 மதல் 35 பிரதிவாதிகள் கிரையம் பெற்று வீடுகள் கட்டி வசித்து வருவதாக எனது தகப்பனார் எதிர் வழக்குரையில் பொய்யாக தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. நிருபணவாக்குமூலம் பத்தி 9 ல் வாதி சர்வே எண் 44/2 சி சொத்தை பொருத்து அதன் பட்டாவை மாற்ற ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்ததாக பொய்யாக சொல்லியிருக்கிறார் என நான் தெரிவித்திருப்பது தவறு என்றால் சரியல்ல. சர்வே எண் 44/2 ல் கண்டுள்ள சொத்தில் ஏற்கனவே விவசாயம் நடைபெற்றது என்றால் எனது தந்தை விவசாயம் செய்தார். தாவா சொத்தான 9 ஏக்கர் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் அந்த சொத்தில் கண்டுள்ள பகுதி சொத்தை எனது தகப்பனார் மோசடியாக சிலருக்கு ஆவணங்கள் மூலம் கிரையம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த அசல் வழக்கில் முதலில் இடம்பெற்றிருந்த பிரதிவாதிகளின் வாரிசுதாரர்களுக்கும் தாவா சொத்தை பொருத்து எந்த வித உரிமையும் இல்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொருத்து வழக்கில் கண்டுள்ள என்னையும் சேர்த்து பிற பிரதிவாதிகள் யாருக்கும் உரிமை இ்ல்லை என்றும் தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் அதனால் வாதி பிராதில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. வழக்கின் பின்னிட்டு என்னாலும் மற்ற பிரதிவாதிகளாலும் தாவா சொத்தில் கட்டப்பட்டுள்ள கட்டுமானம் ஆனது அகற்றப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை